**தலைப்பு**:
சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் பார்ப்பதென்றால் என்ன**?**

Thursday Bible Study
ACA Avadi Church
25 January 2024

**2 தீமோத்தேயு 2:15 -**
நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

• வேதத்தை கையாளுவது ஒரு விளையாட்டுத்தனமான காரியமாகவோ அல்லது அவைகளில் ஒன்றாகவோ மாறிவிடக் கூடாது.
• மனிதனுக்கும் தேவனுக்கும் முன்பாக வெட்கப்படாமல் இருக்கவும், தேவனால் அங்கீகரிக்கப்படவும் நாம் சத்திய வார்த்தையை சரியாக பகுத்துப் பார்க்க வேண்டும்.
• இது ஒரு வாள் போன்றது, விளையாட்டுத்தனமாக கையாளுவது முறை அல்ல.
• சத்திய வசனத்தை நாம் விளையாட்டாக கையாளுவது சரியல்ல.
• சத்திய வசனத்தை படிப்பது ஒரு வேலை போன்றது
• முயற்சி தேவை.
• கவனம் தேவை.
• தீமோத்தேயு சிறுவயதிலிருந்தே தேவ வசனத்தை நன்கு அறிந்து அவைகளில் பயிற்றுவிக்கப்பட்டு இருந்தான்.
• தீமோத்தேயு தனது தாயார் மற்றும் பாட்டி மூலம் தேவனின் வார்த்தையைக் கற்றுக்கொண்டார் (2 தீமோத்தேயு 1:5),
• அவர் பவுலின் மூலம் பயிற்றுவிக்கப்பட்டு அவரோடு பல ஆண்டுகள் ஊழியத்தில் சேவை செய்தார்
• ஆனாலும், பவுல் தீமோத்தேயுவிடம் நீ வேத வசனத்தை கவனமாக படித்து அதை சரியான விதத்தில் சத்தியத்தை பகுத்துப் பார்க்க வேண்டும்.
• சத்திய வசனத்தில் நீ தொடர்ச்சியாக கவனம் செலுத்தாவிட்டால் உன்னால் உறுதியாக நிற்கவோ வசனத்தை தெளிவாக போதிக்கவோ முடியாது.
• பவுல் தீமோத்தேயுக்கு எச்சரிக்கையாக உன்னை குறித்தும் உன் போதனையை குறித்தும் கவனமாக இரு என்கிறார்.

**1 தீமோத்தேயு 4:16**
உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்.

சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் பார்ப்பதென்றால் என்ன?

## 1. சத்திய வசனத்தை ______________________________

### 2 தீமோத்தேயு 2:15 -

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

- சத்திய வசனத்தை சரியான விதத்தில் கையாளுவது.
- தெளிந்த மனதோடு சத்திய வசனத்தை பகுத்துப் பார்க்க வேண்டும்
- சத்திய வசனத்தை ஒரு காட்டு மிருகம் தன் இரையை பீறிட்டு கிழித்து போடுவது போல் அல்லாமல் சரியான விதத்தில் பகுக்கப்பட வேண்டும்.
- சத்திய வசனத்தை சரியான விதத்தில் பகுத்து துண்டித்து காட்டுவது ஒரு ஊழியக்காரனின் கடமையில் முக்கிய பங்கு.
- சத்திய வசனத்தை துண்டு துண்டாக பகுத்து தெளிந்த, தனித்துவமாக பகுத்து போதிக்க வேண்டும்.
- ஒவ்வொரு சுவிசேஷ ஊழியனும் கிரியையின் உடன்படிக்கைக்கும் கிருபையின் உடன்படிக்கைக்கும் இடையே பகுத்து பிரித்துக் காட்ட வேண்டும்

- தெளிந்த மனதுடனே பகுத்துப் பார்க்க வேண்டும்.

### 2 தீமோத்தேயு 2:7 -

நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள்; கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்.

- தேவனின் வார்த்தை மக்களை மகிழ்விப்பதற்கோ அல்லது அவர்களை வசீகரிப்பதற்கோ பயன்படுத்தப்பட கூடாது .
- வேத வசனம் நமக்கு ஒரு பட்டயத்தை போல வர்ணித்துக் காட்டுகிறது.
- ஆனால் அவை கிறிஸ்துவுக்கு ஆத்தும ஆதாயம் பண்ணுவதற்கு ஒரு பட்டயத்தை போல் பயன்படுத்தப்பட வேண்டும்.
- கிறிஸ்துவிடமிருந்து பாவிகளை பயமுறுத்துவதற்காக சத்திய வார்த்தையை ஒருபோதும் பயன்படுத்தப்படக்கூடாது.
- மலை உச்சியிலிருந்து பாறைகளை உருட்டி விட்டு பாவிகளின் வழியில் தடை கற்களை ஏற்படுத்துவது போல சிலருடைய உபதேசங்கள் இருக்கின்றன. (போதிக்கிறார்கள்)
- சத்திய வசனத்தை சரியான விதத்தில் கையாளுவது என்பது மனிதர்களை கிறிஸ்துவின் அண்டை இழுத்துக் கொள்ளும் படியாக ஒரு இனிமையான உறுதியை அளிக்கிறது.
- பாவிகள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வதற்கு பயன்படுகிறது.
- மனிதனுடைய இருதயத்தில் கிருபையின் உண்மையான வேலை பாட்டைப் உருவாக்க பயன்படுகிறது.

## 2. சத்திய வசனத்தை ______

### 2 தீமோத்தேயு 2:15

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

(திறமையான, பயிற்சி பெற்ற) - சரியாக வெட்டுதல்)

- சத்திய வசனத்தை நாம் மிகவும் நேர்த்தியாக ஜாக்கிரதையாக கையாள வேண்டும்
- வேத வசனம் பொய்யாக இருக்குமானால் நாம் பகுத்தறிந்து பார்க்கக்கூடிய அவசியம் இல்லை.
- ஆனால் நாமோ விலையேறப்பெற்ற சத்தியத்தை கையாளுகிறோம்.
- சத்தியத்தை கையாளுவது என்பது உடையக்கூடிய பொருட்கள் / விலையேறப்பெற்ற உலோகங்களை கையாளுவது போன்றது.
- ஒரு உழவன் ஒரு நிலத்தை உழும் போதும் அவன் விதைகளை விதைக்கும் போதும் ஒரே வரிசையில் கோணல் இல்லாமல் விதைக்கிறான் .அந்த மாதிரி நீ வேத வசனத்தை சத்தியத்தை விட்டு பிசகாமல் பகுத்துப் பார்த்து விளக்கம் கொடுக்க வேண்டும்.

**a. பிதாவாகிய தேவன் " சத்தியமுள்ள தேவன்" என்று வெளிப்படுத்துகிறது.**

**யாத்திராகமம் 34:6-7**

6. கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர், இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். 7. ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்.

**உபாகமம் 32:4 –**

அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்.

**b. குமாரனாகிய தேவனும் "சத்தியமுள்ளவராக" தன்னை வெளிப்படுத்துகிறார்.**

**யோவான் 14:6 -**

அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

**c. பரிசுத்த ஆவியாகிய தேவனும் தன்னை "சத்தியமுள்ளவராக" வெளிப்படுத்துகிறார்.**

**யோவான் 16:13 -**

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

**d. தேவனுடைய சபை "சத்தியத்துக்கு தூணும் ஆதாரமாய்" இருக்கிறது**

**1 தீமோத்தேயு 3:15 -**

தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

**e. தேவனுடைய வார்த்தையும் "சத்தியம்" உள்ளது.**

**2 தீமோத்தேயு 2:15 -**

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

**சங்கீதம் 119:142 -**

உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம்.

**சங்கீதம் 119:160 -**

உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்.

**இது பிசாசின் உடைய தன்மைக்கு நேர் எதிரானது.**

**யோவான் 8:44 -**

நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.

- சத்தியமே தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் சாரமாய் இருக்கிறது.
- ஏனென்றால் தேவனும் அவருடைய வார்த்தையும் சத்தியம் உள்ளவைகள் ஆனதினால்...பவுல் தீமோத்தேயிடம் சத்திய வசனத்தை நீ அவசரமாக அல்ல நிதானமாக பகுத்து போதிக்க வேண்டும் என்றார்.
- சத்திய வசனம் முழுவதும் உண்மையானதும் முற்றிலும் நேர்மையானதாகும்.

**நீதிமொழிகள் 12:22 -**

பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்.

**நீதிமொழிகள் 23:23 -**

சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு.

**கலாத்தியர் 4:16 -**

நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ?

**யோவான் 8:45 -**
நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை.

## 3. சத்திய வசனத்தை ________________

**2 தீமோத்தேயு 2:15 -**
நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

- ஒரு குடும்பத் தலைவனின் வேலை என்னவென்றால் ,உணவில் எந்த பாகம்(பகுதி) யாருக்கு சரியாக அமையும் என்று பிரித்துப் பார்த்து பகிர்ந்து கொடுப்பார்..
- ஒவ்வொருவரின் தேவைகளையும் சரியாக அறிந்து பகிர்ந்து கொடுக்க வேண்டும். வலிமையான ஆண்களுக்கு பால் கொடுக்கக்கூடாது குழந்தைகளுக்கு கடினமான உணவு கொடுக்க கூடாது. பிள்ளைகளின் அப்பத்தை நாய்களுக்கும் பன்றிகளின் தவிட்டை குழந்தைகளுக்கும் கொடுக்க மாட்டார்கள்.

**1 கொரிந்தியர் 3:1-3 -**
1. மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களு டனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று. 2. நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக்கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. 3. பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?

**எபிரெயர் 5:12-14**
12. காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். 13. பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். 14. பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.

## ANSWERS

**சத்திய வசனத்தை சரியாக பிரிப்பது எப்படி ?**
சத்திய வசனத்தை சரியாக பிரித்து பார்ப்பது என்றால் என்ன?

1. **சத்திய வசனத்தை தெளிந்த மனதோடு பகுத்து பார்க்கவேண்டும்**
2. **சத்திய வசனத்தை நேர்த்தியாக பகுத்து பார்க்கவேண்டும்**
3. **சத்திய வசனத்தை பகிந்துகொடுக்க வேண்டும்**